# தரிசனம் நிச்சயம் நிறைவேறும், அது தாமதிப்பதில்லை



சகோதரி. பிரேமாடேவிட்

**குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது, முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது. அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை. ஆபகூக் 2:3.**

கிறிஸ்துவில் அன்பான வாலிபதம்பி, தங்கைகளே தரிசனங்களை நமக்குத் தருகிறவரும், அதை நம்முடைய வாழ்வில் நிறைவேற்றி முடிக்கிறவருமான நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெரிய நாமத்தில் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள். உங்கள் வாழ்க்கையை குறித்தான தேவனுடைய தரிசனம் இந்த ஆண்டில் நிச்சயம் உங்கள் வாழ்வில் நிறைவேறும். இனியும் அது தாமதிப்பதில்லை. அதற்காக எதிர்பார்த்து காத்திருங்கள். காத்திருந்து, காத்திருந்து சோர்ந்து போய் விட்டீர்களா? கலங்காதீர்கள். உங்கள் தரிசனம் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. குறித்த காலம், ஏற்ற நேரத்திற்காக அது ஆயத்தமாயிருக்கிறது. அதினதின் காலத்தில் சகலத்தையும் நேர்த்தியாக செய்கிற தேவன், அழகாக, சிறப்பாக உங்களுக்கு நன்மையாக நிறைவேற்றுவார். அவர் பொய் சொல்ல ஒரு மனிதனல்ல, மனமாற மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? இதுவரை உங்களின் நன்மைக்காக தாமதித்திருந்தாலும் இனி அது தாமதிப்பதில்லை. ஏனென்றால் தேவன் குறித்த காலம், தயை செய்யும் வேளை வந்து விட்டது. அது பொய் சொல்லாது. நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண்போகாது.

## தாமதித்தாலும் நிச்சயம் நிறைவேறும்

ஆபிரகாமுக்கு ஒரு சந்ததியைத் தருவேன் என்று ஆண்டவர் சொல்லி பல ஆண்டுகள் ஆயிற்று. ஆபிரகாமும், சாராளும் நம்பிக்கையோடு காத்திருந்தனர். தாமதமான போது மறுபடியும் தேவன் ஆபிரகாமிடத்தில் சொன்னார் உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடுவாயாக என்றார். மறுபடியும் ஒரு உற்பவ காலத் திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்கு திரும்ப வருவேன். அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். இதை சாராள் கேட்டவுடனே நகைத்து, நடக்குமோ, நடக்காதோ என தயக்கத் துடன் சிரித்தாலும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவர் என்று சந்தேகப்படாமல் முழு நிச்சயமாய் தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவர்களானார்கள். தாமதங்கள் வந்து இருந்தாலும் ஆபிரகாமை குறித்த தரிசனம் குறித்த காலத்தில் நிறைவேறினது. இது போல உங்கள் வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு தடைகளும் விலகும், தாமதங்கள் நீங்கும். உங்களுக்கு ஆசீர்வாதமாக தரிசனம் நிறை வேறுவதைப் பார்ப்பீர்கள். அதை அனுபவித்து தேவனை மகிமைப்படுத்துவீர்கள்.

## தரிசனம் நிச்சயம் நிறைவேறும்

நம்மை குறித்த தேவனின் நோக்கமும், திட்டமும் தான் தரிசனம். நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் நம்முடைய வாழ்க்கையிலும், தேசங்களிலும் நிறைவேறப் போவதை தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் முன்கூட்டியே வெளிப்படுத்தி அறிவிக்கிறார். சில சமயங்களில் கனவுகள் மூலமும்,

அவரோடு நெருங்கி ஐக்கியமாக இருக்கிற தேவ ஊழியர்கள் மூலமும் வெளிப்படுத்துகிறார். இந்த தரிசனங்களை அல்லது வார்த்தைகளை நாம் பெற்றுக் கொண்டவுடனே எல்லாம் நிறைவேறாது. அந்தந்த காலங்களில் நிச்சயம் நிறைவேறும். நாம் அவசரப்படுகிற விதத்தில் அல்ல. நமக்கு நன்மையான நேரத்தில். நாம் ஆசீர்வதிக்கப்படும் விதத்திலே தேவன் அதை நிறைவேற்றுவார். யோசேப்பு தாயை இழந்த போதும், தகப்பனால் அதிகம் நேசிக்கப்பட்டவன். அவன் கண்ட கனவு தகப்பனே வெறுத்துப் பேசும் அளவுக்கு ஆனது. வயலில் அறுத்த அரிகளில் தன்னுடையது நிமிர்ந்த நிற்கிறது. மற்றவர்களுடைய அரிக்கட்டுகளெல்லாம் தன்னை வணங்குவது போலவும் சூரியனும். சந்திரனும். நட்சத்திரங்களும் தன்னை வணங்குவது போலவும் கனவு கண்டான். இதனால் சகோதரர்கள் அவன்மீது பொறாமை கொண்டு. பகைத்து. குழியில் தள்ளினார்கள். பின்பு அவனை அதிலிருந்து எடுத்து எகிப்துக்கு அடிமையாக விற்றார்கள். இவன் கனவும் இவனும் என்று கேலி பண்ணி சிரித்திருப்பார்கள். ஆனால் நடந்தது என்ன? அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு எகிப்துக்கு அதிபதியானான். அவன் கனவின்படியே அவன் சகோதரர்கள் அவனை வணங்கினார்கள். யோசேப்பின் உதவியால் தான் உயிர் வாழ முடிந்தது.

யோசேப்பை குறித்த தேவ நோக்கம் அவனை அதிபதியாக்கினது. இஸ்ரவேல் ஜனங்கள் அழிந்து போகாமல் காக்கப்பட்டு. அவர்கள் சந்ததியில் இயேசு பிறந்து உலகை இரட்சிக்க வேண்டும் என்ற இந்த நோக்கம் நிறைவேற யோசேப்புக்கு எத்தனை கஷ்டங்கள். குற்றச்சாட்டுகள் ஆகிலும் யோசேப்பும் தேவனுக்குப் விரோதமாய் பாவம் செய்வது எப்படி? என்று பாவத்திற்கு விலகி ஓடி வந்ததால். தேவ நோக்கம், தரிசனம் நிறைவேறினது. யோசேப்பை போல தான் நீங்களும் இருக்கிறீர்களா? கவலைப் படாதிருங்கள். யோசேப்பின் கனவு, தரிசனம் நிறைவேறினது போல. உங்கள் தரிசனம் நிச்சயம் நிறைவேறும். நீங்கள் உயர்த்தப்படுவீர்கள். நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தாலும் இயேசுவை விசுவாசிக்கக்கூடிய ஒரு மகள் தான் எழுதப்போகும் (Foreign) Nursing Exam-யில் Pass ஆவதற்காக ஜெபிக்க சொன்னாள். மேலும் ஏற்கனவே ஒருமுறை Exam attend பண்ணி fail ஆயிட்டேன். இதுதான் கடைசி வாய்ப்பு இதை விட்டால் அடுத்த Exam எழுத முடியாது பாஸாகி விட்டால் பார்க்கிற வேலையில் permanent ஆகிடலாம். Exam Fees அதிகமான தொகை. 8 மணி நேரம் travel பண்ணி Exam Centre - க்குப் போகணும். பனி அதிகம் அதனால் Husband கார் ஓட்டணும் இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். ஆறு மணி நேரம் Exam நடக்கும். கொஞ்சம் தப்பா Answer பண்ணிட்டால் Computer Automatic -ஆ shut down ஆயிரும். 200 கேள்விகள் கேட்பார்கள் சரியா Answer பண்ணணும். வேலை செய்யும் இடத்தில் நிறைய Insult. இயேசப்பா நிச்சயம் எனக்கு உதவி செய்வார்னு நான் நம்புகிறேன். நீங்க ஜெபம் பண்ணுங்கள் என்றாள். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் நிச்சயம் ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்வார். நீங்கள் Pass ஆவீர்கள் என்று சொல்லி ஜெபித்தோம். Exam நடைபெற்ற நாளிலும் ஆலயத்திற்கு சென்று ஆண்டவர் அந்த மகளுக்கு சொன்ன வசனங்களை சொல்லி உதவி தேவைப்படும் இந்த காலத்திலே உதவி செய்யும் என்று ஜெபித்தோம். மறுநாள் காலையிலே Phone பண்ணி Exam tough தான். ஆனால் நான் Exam முடிக்கிற வரைக்கும் Computer shut down ஆகவே இல்லை. இரண்டு நாளில் Result வந்துரும் என்றாள். ஆனால் ஒரே நாளில் Result வந்துருச்சு. நான் Pass ஆகிவிட்டேன் இயேசப்பா வுக்கு நன்றி என்று சொன்னாள். "**விசுவாசித்தவளே பாக்கியவதி கர்த்தராலே அவளுக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும். லூக்கா** 1:45 தேவனை மகிமைப்படுத்த அவளுக்கு வேலை கிடைத்தது. தேவனுக்கு மகிமையாக ஏறெடுக்கப்பட்ட ஜெபங் களுக்கும் பதிலும் வந்துவிட்டது. அவளைக் குறித்த தேவனுடைய திட்டமும் தரிசனமும் நிறைவேறியது இதே போல உங்களுக்கும் நிச்சயம் வெற்றியும் உயர்வும் வரும்.

இந்த புதிய ஆண்டிலே உங்கள் வாழ்க்கையின் அனைத்து காரியத்திற்காக இயேசுவை நம்புங்கள். தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையான ஈவுகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? என்ற ஆண்டவர் இயேசு தாமே உங்கள் விருப்பங்களையும். விண்ணப்பங்களையும். உங்கள் தரிசனங்களையும் நிச்சயமாய் நிறைவேற்றி உங்களை ஆசீர்வதித்து இந்த ஆண்டு முழுவதும் பாதுகாத்து வழி நடத்துவாராக!